வள்ளுவர் ஆண்டு 2009
ஆவணி 21
ஷவ்வால் பிறை 2
புதன் (6-9-1978)
நிருவியது 1947
புத்தகம் 32
இதழ் 21

# சுதந்திரன்
SUTANTIRAN



விலை சதம் 35


# தொகுதிதோறும் நாளை தமிழீழ சுதந்திரக்கொடி!

செப்டம்பர் 7ம்நாள் சிங்கள நாட்டில் சிறீலங்காவின் தேசியக் கொடி ஏற்றப்படும் அதே சமயம், தமிழீழத்தின் தேசியக் கொடியான உதயசூரியன் கொடி தமிழீழத்திலுள்ள ஒவ்வொரு தொகுதியிலும் வைபவரீதியாக ஏற்றிவைக்கப்படவிருக்கிறது. தமிழீழத் தேசியக்கீதம் முழங்க இந்தக் கொடி ஏற்றிவைக்கப்பட்டு, கொடி வணக்கம் செய்யப்படும். இதற்கு ஒவ்வொரு தொகுதியினதும் கூட்டணி அமைப்பாளர்களே (அனைத்துக் கூட்டணி பா.உ.க்களும்) பொறுப்பேற்றுள்ளனர். அவர்களே இதைச் செய்யவேண்டுமென்று கூட்டணியின் மத்திய செயற்குழுகட்டளையிட்டுள்ளது. யாழ்ப்பாணத் தொகுதியில் கூட்டணியின் தலைமைச்செயலகத்தில் தமிழீழத் தேசியக் கொடியை யாழ் பா.உ. திரு. வே. யோகேஸ்வரன் 7ம் திகதி காலை 10 மணிக்கு ஏற்றிவைப்பார்.

செப்டம்பர் 7 — 8 — புதிய அரசியலமைப்பு அமுல்!

# சிங்கள நாட்டிலும் போர்க்கோலம்!

## தமிழீழத்தில் பகிஷ்கரிப்பு ஏற்பாடுகள் பூர்த்தி

### அரசாங்கம் பீதி! பொலிசாருக்கு சர்வ அதிகாரம்!

புதிய சர்வாதிகார அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும் நாளான செப்டம்பர் 7, 8ம் திகதிகளில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழீழம் மட்டுமன்றி சிங்கள நாடும் போர்க்கோலம் பூண்டுள்ளது. இதனால் அங்கு பதட்ட நிலைமைகள் ஏற்படக்கூடும் என்று அஞ்சிய யூ. என். பி. ஆட்சியாளர்கள் நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிசாருக்கு சர்வாதிகாரமும் வழங்கியுள்ளனர்.

சிங்களவர்கள் மத்தியில் ஏதாவது மோதல் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்புக்குள்ளாகுபவர்கள் சிங்கள நாட்டில் வாழும் தமிழர்களே. எனவே சிங்கள நாட்டில் தோன்றியுள்ள பதட்ட நிலை காரணமாக, கொழும்பிலும் ஏனைய சிங்கள நாட்டின் பல பகுதிகளிலும் மலையகத்திலும் வாழும் தமிழர்களும் செப்டம்பர் 7, 8 ஆகிய நாட்களில் நடைபெறும் எந்த அரசாங்கக் கொண்டாட்டங்களுக்கும் செல்வதில்லையென்றும் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதில்லையென்றும், வீணை ஆபத்துக்களில் மாட்டிக் கொள்ளாது தத்தமது இல்லங்களிலே அந்த இரு நாட்களும் அமைதியாக இருந்து பிரார்த்தனையிலீடுபடுவதே புத்திசாலித்தனமென்றும் கருதுகின்றனர்.

புதிய அரசியலமைப்பு கொண்டாட்டங்களைப் பகிஷ்கரித்து சிங்கள நாட்டிலுள்ள அரசாங்கக் கூட்டுத்தாபனக் கட்டடங்களில் கறுப்புக்கொடிகளை ஏற்றுவதற்கு அரசுக்கு எதிரான சக்திகள் திட்டமிட்டுள்ளதாகக் கிடைத்த செய்தியைத் தொடர்ந்து பீதியடைந்த அரசாங்கம், அவ்வாறு செய்பவர்களை உடனடியாகக் கைதுசெய்து, பிணை எதுவும் வழங்கப்படாத முறையில் விளக்க

—4-ம் பக்கம் பார்க்க

## முஸ்லீம் மாணவர்களும் பங்கேற்கார்!

ரம்சான் விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கும் முஸ்லீம் பாடசாலைகள் யாவும் எதிர் வரும் 12-9-78ல் தான் மீளவும் திறக்கப்படவுள்ளன. ஆகவே புதிய அரசியல் அமைப்புத் திட்டத்துக்கு விசுவாசப் பிரமாணம் செய்யும் நிகழ்ச்சிகள் எதிர்வரும் 7ம், 8ம் திகதிகளில் முஸ்லீம் பாடசாலைகளிலும் இடம்பெறும் சாத்தியம் இல்லை. முஸ்லீம் மாணவர்களும் கண்டிப்பாக 7ம், 8ம் திகதிகளில் மேற்படி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேயாக வேண்டுமென்று நிர்ப்பந்திப்பதாயின் முஸ்லீம் மக்களின் ரம்சான் பெருநாள் கொண்டாட்டங்களில் தலையிடுவதாகுமென்ற பீதி அரசாங்கத்துக்கு. ஆகவே ஏறக்குறைய ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட முஸ்லீம் மாணவர்கள் 7ம், 8ம் திகதிகளில் பாடசாலைகளுக்குச் செல்லமாட்டார்கள்.

● கொக்குவில் இந்துக் கல்லூரியில்

# சிங்கள மொழித் திணிப்பு?

கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் தமிழ்-ஆசிரியையொருவரின் தந்திரோபாயத்தினால், அங்கு சிங்களம் படிப்பிக்கக்கூடிய பேராபத்து ஒன்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. சிங்களத்தை ஒரு பாடமாக தமிழ் மாணவ மாணவிகள் கற்க வேண்டுமென்றும், அதனால் நன்மை கிடைக்குமென்றும் க. பொ. த. (சாதாரண) வகுப்பு மாணவ மாணவியரிடையே குறித்த ஆசிரியை ஆசையூட்டியதன் காரணமாக 27 மாணவிகள் சிங்களம் படிப்பதற்கு சம்மதம் தெரிவித்து கையெழுத்திட்டுள்ளனராம். இதையறிந்த அக்கல்லூரியின் ஏனைய இன உணர்வுமிக்க தமிழ் மாணவ மாணவியரும் பெற்றோரும் பெரும் கொதிப்படைந்துள்ளனர். சிங்களம் படிப்பதற்கு சம்மதம்தெரிவித்துக் கையெழுத்திட்ட 27 மாணவியரும் இப்போது தமது செய்கைக்காக வெட்கப்படுகின்றனராம்.

மறைந்த அறிஞர் ஹண்டி பேரின்பநாயகம் அவர்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபராக இருந்த போது 1956ல் சிங்களம் மட்டும் சட்டம் வந்தவுடன், கொக்குவில் இந்துக்கல்லூரியில் சிங்களப் போதனையை உடனடியாக நிறுத்தினர். அன்று முதல், சிங்களம் மட்டும் சட்டம் நீக்கப்படும் வரை சிங்களத்தை ஒரு பாடமாக தமிழ்ப் பாடசாலைகளில் போதிக்கக்கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்துவந்தார்.

பேரறிஞர் ஹண்டி அவர்களின் தலைமையில்இயங்கிய கொக்குவில் இந்துக்கல்லூரி இன்று சிங்களத்தை ஏற்றுக் கோணல் வழி செல்லுவதா? என்று பலரும் ஏங்குகின்றனர்.

இது விஷயத்தில் நல்லூர் பா உ. திரு. மு. சிவசிதம்பரம் உடனடியாக பெற்றோர் சங்கத்தைக் கூட்டி பலத்த ஆட்சேபனையை எழுப்பி சிங்களப் போதனைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சியில் உடனடியாக ஈடுபடுவார் என்று தெரிகிறது.

# தமிழ்ஈழக் கோரிக்கைக்கு விஜயவீராவும் எதிர்ப்பு!

ஒரு தனித் தேசியஇனம் என்ற முறையில் தனக்கேயுரிய மறுக்கொணா சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து, ஒரு சுதந்திரத் தமிழீழ அரசை மீளஅமைத்துக்

—4-ம் பக்கம் பார்க்க

# 'பாண்ட்' வாசிக்க மாணவிகள் மறுப்பு!

## நாதஸ்வர கலைஞர்கள் அரசுக்கு கரிப்பூச்சு!

புதிய அரசமைப்புத் திட்ட விசுவாசப் பிரமாண கொழும்பு நிகழ்ச்சிகளில் பாண்ட் வாத்தியம் இசைப்பதற்கு அழைக்கப்பட்ட யாழ் வேம்படி மகளிர் அழைப்பை ஏற்றுக்கொள்ள இயலாதநிலை! வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் இசைய மறுத்தது தெரிந்ததே!

வேம்படி மாணவிகள் இப்படிச் சுகவீனித்ததுப் யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்திடம் அழைப்பு விடுக்கப்பட்டதாம். தமது பிள்ளைகளை கொழும்புக்கு அனுப்புவதற்கு பெற்றோர் மறுத்து ஆட்சேபக்கடிதங்களை அனுப்பிவருகிறார்கள். இதனால் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் முன்மாதிரியைப் பின்பற்றி யாழ் திருக்குடும்ப கன்னியர்மட மாணவிகளும் காலைவாரி விட்டனர்.

யாழ் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்த கொழும்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு நாதஸ்வர—தவில் கலைஞர்களும் மறுத்திருப்பதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. நாதஸ்வர—தவில் கலைஞர்கள் மலிந்த யாழ்ப்பாணத்தில் மேற்படி நிகழ்ச்சிக்கு ஒருவரைத்தானும் தேடிப்பிடிக்க முடியவில்லையே என்று அதற்காகப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள உத்தியோகத்தர்கள் அங்கலாய்க்கிறார்களாம். சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் கலைஞர்களை பொது நிகழ்ச்சிகள் எதற்கும் அழைப்பதில்லை முற்றுமுழுதாக அவர்களைப் பகிஷ்கரிப்பதென்று யாழ் பொதுமக்களும் துடிப்புள்ள இளைஞர்களும் அறிவித்துள்ளனர்.

## பெருநாள் வாழ்த்து!

முஸ்லீம் பெருங்குடி மக்களுக்கு சுதந்திரன் தனது ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மதுறுஓயாத் திட்டம் ஓர் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்!"

## இதை எதிர்ப்பதற்கு சிங்கள முற்போக்குவாதிகளும் முன்வரவேண்டுமென்கிறது தமிழ் இடதுசாரி ஏடு

**யூ. என். பி. ஆட்சியின் மதுறு ஓயாத்திட்டம் தமிழ்தேசிய இனத்தின் பாரம்பரிய பிரதேசத்தை கபளீகரம் செய்யும் சிங்களப் பேரினவாத நடவடிக்கையேயென்றும், இதை எதிர்ப்பதற்கு தமிழ்-முஸலீம் மக்கள் மட்டுமன்றி சிங்களவர்களிடையேயுள்ள முற்போக்கு சக்திகளும் முன்வரவேண்டுமென்றும் தமிழ்இடதுசாரி(சீனசார்பு)பத்திரிகையான'போராளி' எழுதியுள்ளது.**

**வழமைபோலவே இப்பத்திரிகை தமிழர் விடுதலை கூட்டணிக்கு எதிராக வசைபாடியிருந்தாலும், மதுறு ஓயாக்குடியேற்றத்தின் அபாயம் பற்றி இப்பத்திரிகை வெளியிட்டுள்ள கருத்துக்களை இங்கே தருகிறோம்.**

இழக்கு மாகாணம் தமிழ் மக்களினதும் முஸ்லீம் மக்களினதும் பாரம்பரிய வாழ்க்கைப்பிரதேசமாகும். இம்மாகாணத்தில் தான் விரைவில் இலங்கையின் மிகப்பெரிய குடியேற்றத் திட்டங்களில் ஒன்றான மதுறு ஓயா குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இக்குடியேற்றத் திட்டத்தில் 45,000 குடும்பங்கள் குடியேற்றப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இக் குடியேற்றத் திட்டம் சம்பந்தமாக ஏற்கனவே சர்ச்சைகள் கிளம்பியுள்ளன. இக் குடியேற்றத்தின் மூலம் திட்டமிட்ட அடிப்படையில் சிங்களக்குடியேற்றம் நடைபெறவுள்ளதாக தமிழர்விடுதலைகூட்டணிகுற்றம்சாட்டியுள்ளது. ஆனால் அரசாங்கத்தின் ஒரேயொரு தமிழ் அமைச்சரும், கல்குடா எம். பியுமான திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் அங்கு சிங்களக் குடியேற்றம் நடைபெறுது என்று கூறி வருகிறார். ஆனால் அமைச்சரின் கூற்றுக்கு பதிலளிப்பது போல, இன்னொரு அமைச்சரான திரு. காமினி திசாநாயகா பேசியுள்ளார். சமீபத்தில் அவர் நடத்திய பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில், ''மதுறு ஓயா குடியேற்றத் திட்டத்தில் கிழக்கிலங்கையில் இருந்து மட்டுமல்ல, முழு நாட்டிலிருந்தும் தெரிவு செய்யப்படும் 45 ஆயிரம் குடும்பங்கள் குடியமர்த்தப்படும்'' எனக்கூறியுள்ளார்.

### யூ.என்.பி.யின் கொள்கை

அமைச்சர்களுக்கிடையிலான கருத்து மோதல் ஒருபுறமிருக்க இக்குடியேற்றத்தால் ஏற்படும் விளைவுகள் என்ன என்பதை நாம் சிந்திப்பது முக்கியமானது.

யூ. என். பி. அரசு டி. எஸ். சேனநாயக்கா காலத்திலேயே திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தை ஆரம்பித்து விட்டது. அக் கொள்கை தொடர்ந்து வந்த எல்லா அரசுகளினுலும் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. இதன் காரணமாக கிழக்கு மாகாணத்தின் அநேக பகுதிகளும் (முக்கியமாக திருகோணமலைப் பிரதேசம்) வவுனியாப் பிரதேசமும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இந்நிலைமை பார் தமிழ் மக்[illegible] பாரம்பரியப் பிரதேசம் ஒன்று இருக்கிறதா என்ற நிலை இன்று எழுந்துள்ளது.

இந்த நிலைமை இத்துடன் நின்று விடப்போவதில்லை. 77 ஆகஸ்ட் இன ஒடுக்குமுறையின்பின் பாராளுமன்றத்தில் பேசிய அப்போதைய பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்று ஒன்றை ஏற்கமுடியாதென்றும், டி. எஸ். சேனநாயக்காவின் காணிக் கொள்கை தொடரப்படும் என்றும் தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளார், அரசின் இந்த பெருமின ஆதிக்கக் கொள்கையின் விளைவே மதுறு ஓயா குடியேற்றத்திட்டமாகும்.

ஒருஇனத்தவர் இன்னொரு இனத்தவரின் மொழியைப் படிப்பதால் அவர்களுடைய தனித்துவம் பாதிக்கப்படாது. ஆனல் ஒரு இனத்தின் பாரம்பரிய பகுதிகளில் இன்னொரு இனத்தை திட்டமிட்டுக் குடியேற்றுவதினுல் அந்த இனத்தையே காலப் போக்கில்அழித்துவிடலாம். இதற்கு வரலாற்றில் பல உதாரணங்கள்உண்டு. புரட்சிக்கு முந்திய ரஷ்யாவிலும், சீனவிலும் இதுவே நடந்தது. அதனலேயே லெனினும் மாஓவும் இனங்களின் தனித்துவத்தை பாதுகாக்க பல்வேறு வழிவகைகளை ஆராய்ந்து முன்வைத்தனர்.

### நியாயமான போராட்டம்

இந்நிலையில் மதுறு ஓயாக் குடியேற்றத்திட்டம் என்ற போர்வையில் நடைபெறவுள்ள திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை தமிழ் மக்களும், முஸ்லீம் மக்களும் எதிர்ப்பது நியாயமானது. இம்மக்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் போராட்டத்தில் சகல முற்போக்கு சக்திகளும், விசேஷமாக சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்கு சக்திகள் பெரும் பங்கு எடுக்க வேண்டும்''.

(போராளி—ஆகஸ்ட் 78)

## அமைச்சர் பதவிகளால் விடுதலை கிடைக்காது!

''இன்றைய அரசியலமைப்பின்கீழ் அமைச்சர் பதவிகளோ, மாவட்ட அமைச்சர் பதவிகளோ எமக்கு விடுதலையைப் பெற்றுத்தரப்போவதில்லை!''

—அ. அமிர்தலிங்கம் பா.உ.

(வீரகேசரி 26-8.78)

# மன்னர் மாவட்டத்திற்கு மீட்பே இல்லையா?

வாழத் துடிக்கும் வாலிப உள்ளங்களின் உணர்ச்சிக் கேள்வி இது. இதற்கு யாராவது விடையளிக்க முன்வந்தால் அவர்கள் பதில் மன்னர் மாவட்டம் என்றுமே மீட்பு அடையாது என்பதாகவே இருக்கும். ஏனெனில் ஒரு சமூகத்தின் மீட்பும், உயர்வும் அச்சமூகத்தில் இருக்கின்ற கல்வி வளர்ச்சியில்தான் தங்கி உள்ளது என்பது மறுக்கமுடியாத ஒன்று. இந்த வேளையிலே மன்னர் மாவட்டத்தின் கல்வியிலே வளர்ச்சியடைந்த நிலைமை இருக்கின்றதா? இல்லவே இல்லை. இதற்கு ஆதாரம் வேண்டுமா?

இன்றைய மன்னரிலே எத்தனை கலாநிதிகள் உண்டு? எத்தனை பொறியியலாளர்கள் உண்டு? எத்தனை வைத்திய நிபுணர்கள் உண்டு? விரல்விட்டு எண்ணிவிடலாம். அதுவும் இருக்கின்றதா? என்பது ஒரு சந்தேகம். இப்படியான மகா மோசமான நிலைஇருக்கின்ற போது தார்மீகம் பேசுகின்ற அரசு 'மன்னர் கல்வியிலே வளர்ச்சியடைந்துவிட்டது'' எனக் கூறுகின்றது. இதுதான தார்மீகம்? ஏன் மன்னர் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் அரசாங்கத்திற்கு பந்தம் பிடிப்பதினுல் எழுந்த சதித் திட்டமா? அன்றேல் பதவியுயர்வுவேண்டி மன்னர் வளர்ச்சியடைந்துவிட்டதென தங்களின் சேவையை அரசுக்கு எடுத்தோதினர்களா? இதனை ஏனையோரும் நம்பிவிட்டீர்களா?

வந்துபாருங்கள் இந்த மாவட்டத்தின் பாடசாலைகளை, இரண்டொரு பாடசாலை தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் எல்லாம் இடிந்து ஒடிந்து உருக்குலைந்து இருக்கின்றன. அங்கே கழுதைகளும் மாடுகளும் வகுப்பறையிலே வந்து சமத்துவமாக கல்வி கற்கின்றன; மழைகாலம் வந்துவிட்டதென்றல் பாடசாலையே இல்லை. அப்படி இருந்துவிட்டால் வகுப்பறையில் குடைபிடிக்கவேண்டிவரும். பரவாயில்லை குடையாவது இருக்குமா? சந்தேகம்.

கோடை வந்ததென்றல் குடிக்க, குளிக்க நீரில்லை பொல்லாத தாகம் ஒருபுறம் தீராத வியாதி மறுபுறம். சுகாதார வசதி இருக்கின்றதா? பல்லுப்பிடுங்கயாழ்ப்பாணம் வரவேண்டும். மகாவலித் திட்டம் செய்கின்றீர்களே எங்களுக்கு குடிக்க குடிநீர் வசதிசெய்து தந்தார்களா? தரம்வாய்ந்த பட்டதாரி ஆசிரியர்கள்மன்னரை எட்டியே பார்ப்பதில்லை. ஏனென்றல் மன்னர் ஒரு பாலைவனம் என்கிறார்கள். இங்குள்ள மாணவர்கள் அறிவு வளர்ச்சியில்லா வேடர்களாக மாறி வருகின்றார்கள்.

இந்த நாகரிகம் அற்ற சூழ்நிலையில் சேவையாற்ற தகுதியான ஆசிரியர்கள் முன்வருவார்களா? எங்கள் பாடசாலைகளிலே போதிய தளபாட வசதியில்லை. ஏன் எழுத முதலாய் வெண்கட்டி இல்லை. அதனுல்தான் பள்ளிக்கூட சுவர்களில் அகரவரிசைகளை கரியால் எழுதிப் படிப்பிக்கின்றனர்.

கண்ணுல் கண்டால் நீங்களே ஏற்றுக்கொள்வீர்கள்.

அதுமட்டுமா? இந்த மாவட்டத்தின் போக்குவரத்து சேவை கல்விவசதியை வெகுவாகப் பாதித்துள்ளது. மன்னர் டிப்போவுக்கு25பஸ்கள் உண்டு. இதில் ஓடக்கூடியது 10 பஸ்கள்; அதிலும் நீண்ட தூரப் பயணமான கொழும்பு போன்றவைகளுக்கு 5 அல்லது 7 பஸ்கள் போய்விட மிகுதி மூன்றுபஸ்கள்சேவையில் நிற்கின்றது." எமக்கு பஸ் இல்லையே என மன்னர் எம். பி. பாராளுமன்றத்தில் முறையிட்டால் எல்லா மாவட்டங்களுக்கும் 29, 30 எனக் கொடுத்துவிட்டு மன்னருக்கு ஒரே ஒரு பஸ் கொடுத்திருக்கின்றார்கள். இதுதான் தார்மீக அரசாங்கத்தின் சமத்துவம்.

அதுதான் போகட்டுமே என்று பார்த்தால் இந்த மாவட்டத்தின் வீதிகளைப் பாருங்கள். பெரும் பெரும் கிடங்குகள் றோட்டின் மத்தியிலே உண்டு. அதிகமான வீதிகள் களிமண் வீதிகள். எங்கள் நிலைமையை வண்டி மாடுகளிடம்கேட்டுப்பாருங்கள். இலங்கைப் பாராளுமன்றத்திற்கு அந்த வண்டி மாடுகளை அனுப்பிவைக்க வேண்டுமா?

இலங்கைவாழ் மக்களே! மன்னர் மாவட்டம் ஒரு பாலைவனம்தான்; அதுஇறைவன் எங்களுக்குத்தந்த அன்புப்பரிசு. ஆனல் இங்கு வாழும் மக்கள் கழுதைகள் அல்ல ஒட்டகங்கள் அல்ல. நாங்களும் மனிதர்கள்; எங்களுக்கும் உணர்வுகள் உண்டு. நாங்கள் உயர்வு அடையவேண்டுமென்றல் சகல பத்திரிகைகளும் குரல் கொடுக்கவேண்டும். இதற்கு இனம் என்றே மொழி என்றே வேறுபாடு இல்லை. மனிதனை மனிதனக வாழவைக்கவேண்டும் என்றல் மானிடரும்உதவவேண்டும்.

—''பேசாலை, தேவதாஸ்'

## எழுக தமிழா

பத்து விரல்களைநம்பி பைந்தமிழ்க் கவிஞன் ஒருவன்
பாசிசச் சிறிமாதந்த அரசியல்சட்டத்தை
எதிர்த்தான் எழுபத்திரெண்டில்!
முத்துமாலைக்குள் விஷத்தைப் பூட்டி தருகின்ற அரசியல்
சட்டத்தை
முந்தி எதிர்க்க எவன்வருவான்? பலிக்கடாவாய்
யார் எழுவான்?
சொத்தும் சுகமும் பெரிதல்ல சுதந்திரநாதத் தேவிதனை
செத்தும் ஏற்பேன் என்றுரைத்து துடித்தெழுவீர்!
சத்தை இழந்த தமிழ்க்குலமே! மானப் பெரும் படையே
சாத்வீக உணர்வு பூண்டு தெய்வ வழிபாட்டில்
பூத்திடுவீர்!

எங்கும் அமைதி பூக்கட்டும்! எழுச்சிநெஞ்சில்
ஆர்க்கட்டும்!
ஈழத்தமிழாம் எம்மண்ணில் சுதந்திர அமைதி
ஒளிரட்டும்!
அங்கும் இங்கும் செல்லாதீர் தெய்வம் நம்பி
நில்லுங்கள்!
அன்றுதமிழர் பள்ளியெலாம் மூடுவிழாவாய்
ஆக்கிடுவீர்!
தங்கச் சூரியன் மறையும்மட்டும் மௌன விரதம்
கொண்டிடுவீர்!
தந்தை தாயர் எல்லோரும் சுதந்திர ஜெபத்தை
ஓதிடுவீர்!
பங்கம் செய்யத் தேவையில்லை! இழந்த நாட்டை
மீட்டிடுவீர்!
புத்தன் காந்திக் கொள்கையிலே தமிழ் உணர்ச்சியை
[illegible]டுவீர்!

(ஆரையம்பதி ஆ. தங்கராசா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்குடா சிங்கள மயமாகிறது! கண்மூடியிருக்கிறார் அமைச்சர் தேவநாயகம்!

## சிங்கள ஊடுருவலைத் தடுப்பது கூட்டணியின் கடமை

சுதந்திரன் வாசகன் என்ற முறையிலும், விடுதலைவிரும்பி என்ற முறையிலும் இம்மடலை வரைகின்றேன்.

இம்மடல் கல்குடாத் தொகுதியிலுள்ள கல்குடா கிராமத்தின் இன்றையநிலை பற்றியதாகும்.

இக்கிராமம், மீன்பிடித் தொழிலுடன், உல்லாசப் பிரயாணக்கைத்தொழிலும் செய்யக்கூடிய வசதி படைத்த கிராமமாகும். இவ்விரண்டு தொழில்களுமே சிங்களக்குடியேற்றத்துக்கு காரணமாயிருக்கின்றன. இங்கு மீன்பிடித் தொழில் செய்வதற்காக வெளி ஊர்களிலிருந்து வந்த சிங்களவர் வாழ்கின்றனர். இவர்கள் இக்கிராமத்தின் சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினராகும்.

கிழக்குக் கரையோரத்தில் வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகளைக் கவரும் முக்கியமான இடமாக இது இருப்பதனால் தனியார் துறையினர் பெரும் ஹோட்டல்களை ஆரம்பிக்கும் அதே வேளையில் இக்கிராமத்தில் சிங்களவர் தொகையும் அதிகரித்துக் கொண்டே போகின்றது.

தற்போது இங்கு பல நவீன ஹோட்டல்கள் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன. இவைகளில் பணிபுரிபவர்களில் 70 வீதமானவர்கள் தென்னிலங்கையிலிருந்து கொண்டு வரப்பட்டவர்களேயாகும். மிகுதி 30 வீதமானவர்கள் மட்டுமே உள்ளூரைச் சேர்ந்தவர்களாகும். எடுபிடி வேலைகள் செய்வதற்கே இவர்கள் பயன் படுத்தப்படுகின்றனர்.

இந்த அநீதியை தெரிந்தும் தெரியாதவர் போல் இருக்கின்றார் இத்தொகுதியின் பிரதிநிதியான கௌரவ நீதியமைச்சர். இந்த ஹோட்டல்கள் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் வேலை வாய்ப்புகளில் இப்பகுதி மக்களுக்கே முதலிடம் அளிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார் திரு. தேவநாயகம். தற்சமயம் ஆளுங்கட்சியின் கௌரவ அமைச்சராக இருக்கையிலும் அதுபற்றி அக்கறை கொள்ளாமல்இருக்கின்றார்.

இப்பகுதியில் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தில் ஹோட்டல்களில் வேலை செய்பவர்கட்கு வீடுகள் கட்டிக் கொடுக்க இருப்பதாக அறிய வருகிறது.

இது ஒரு மறைமுகமான சிங்களக் குடியேற்றமாகும். முதலில் விடு, பின்னர் பாடசாலை, தொடர்ந்து விகாரை பொலிஸ் நிலையம் போன்றன உருவாகி நாளடைவில் சிங்களக்கிராமமாகவே மாறிவிடலாம்.

தற்போதுள்ளஹோட்டல்களை கட்டுவிப்பதற்காக வெளி ஊர்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்களவர்கள் இங்கேயே தங்களது பரிவாரங்களுடன் குடியேறிவிட்டார்கள். முதலில் தனியாக வருவார்கள். பின்னர் மனைவியையும்அழைத்து வருவார்கள். கடைசியில் தம் தந்தை மாமா மாமி ஆகியோரையும் இறக்குமதி செய்து இங்கேயே குடியேறி விட்டார்கள்.

தற்போது இக்கிராமத்தின் சனத்தொகையில் அரை வாசிக்கும் கூடுதலாக தென்னிலங்கையர்கள்இருக்கின்றார்கள். மீண்டும் ஒரு இனக்கலவரம் வந்தால் இக்கிராமத்திலுள்ள தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டு வெளியூர்களுக்கு செல்லவேண்டிய நிலை ஏற்படும்.

இதுமட்டுமல்ல, மேலும் பல ஹோட்டல்களை ஆரம்பிப்பதற்காகவும், வியாபார நிலையங்களை ஆரம்பிப்பதற்காகவும் பெரும்சிங்களபண முதலைகள் தங்களது கழுகுக் கண்களால்நோட்டம்விட்ட வண்ணமிருக்கின்றனர்.

மேலும் கல்குடாவில் 30 லட்சரூபா செலவில் துறைமுகம் கட்டப்படவிருப்பதாக நீதி அமைச்சர் அறிவித்துள்ளார். அதன்மூலம் இக்கிராமத்தில் ஆகக் குறைந்தது 30 சிங்களக் குடும்பங்களாவது குடியேறலாம் என்று எதிர்பார்க்கலாம்.

''அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்படும் சிங்களக்குடியேற்றங்கட்கு மட்டுமே த.வி. கூட்டணியினர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். சிறிய அளவில் சிங்களவர் வந்து ஊடுருவல் செய்வதை அவர்கள் எதிர்க்கிறார்களில்லை'' என்று அமைச்சர் கூறியிருப்பதால் கிராமப்புறங்களில் சிங்களவர் வந்து குடியேறும் விடயத்திலும் த.வி. கூட்டணியின் உதவியையே அமைச்சர் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. இதனால் தமிழ் கிராமங்களை சிங்களக் குடியேற்றத்திலிருந்து பாதுகாக்க த. வி.கூட்டணி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். இதற்கு த.வி. கூட்டணி செய்யக்கூடியது, தனவந்தர்களையும் வியாபாரத்தில் ஈடுபாடு உள்ளவர்களையும் இப்படியான இடங்களில் குடியேறவோ, முதலீடு செய்வதற்கோ தூண்டுவது தான்.

அடுத்து செய்யக்கூடியது, கல்வியறிவற்ற கிராம மக்களுக்கு இப்படியானகுடியேற்றத்தினால் பின்னால் விளையக்கூடிய ஆபத்துக்களை எடுத்துக் கூறுதல், பிரசாரம் செய்தல்போன்றனவாகும். இதில் இப்பகுதி த.வி. கூட்டணி அமைப்பாளர்கள், முக்கியஸ்தர்கள் ஆகியோர் போதிய கவனமின்றியே இருக்கின்றனர்.

முதலில் எமது நிலத்தைக் காப்பாற்றும் பணியிலேயே நாம் கவனம் செலுத்த வேண்டி இருப்பதால் இப்படியான ஊடுருவல்களையும் தடுக்க வேண்டும்.

—'விடுதலை விரும்பி'

---

—1-ம் பக்கத் தொடர்

மறியலில் வைக்கவேண்டுமென்று பொலிசாருக்கு கடும் உத்தரவு பிறப்பித்துள்ளதாம். அத்துடன் அரசியலமைப்புக் கொண்டாட்டங்களுக்கு எதிராக தீவின்எந்தப்பகுதியிலேனும் ஊர்வலங்களோ,அணிவகுப்புக்களோ நடத்தபொலிசார் அனுமதியளிக்கக் கூடாது என்றும் கடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம்.

சிங்கள நாட்டில் எழுந்துள்ள கொந்தளிப்பான சூழ்நிலையாலேயே இவ்வாறான சட்டங்களுக்குள் அரசு பதுங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

### தமிழீழத்தில் பகிஷ்கரிப்பு!

தமிழீழ நாட்டில் செப்டம்பர் 7, 8ல் புதிய ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு எதிரான பகிஷ்கரிப்பு நடவடிக்கைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. மிக அமைதியான முறையில் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றிகரமாக இந்தப் பகிஷ்கரிப்பு நடைபெறவிருக்கிறது.

பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களை தடை செய்தால், அப்படித்தடை செய்பவர்களை கைதுசெய்து 24மணிநேரம் பொலீஸ்நிலையத்தில் அடைத்துவைக்கும்படி பொலிசார் பணிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இதற்கு இடமில்லாதவகையில், தமிழ் மாணவ, மாணவியர் இந்த இரு நாட்களும் பாடசாலைகளுக்கு செல்வதில்லையென்று தாமாகவே முடிவு எடுத்துள்ளனர்.

பாடசாலைகளுக்கு தமது பிள்ளைகளை அனுப்புவதா இல்லையா என்று சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்த சில பெற்றோரும் அன்றைய தினம் (செப்டம்பர் 7, 8) பொலீஸ் கெடுபிடி அதிகரிக்கப்பட்டுள்ளதால், மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையே வீணை தொல்லைகள் ஏற்படக்கூடுமென அஞ்சி, தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதில்லையென்று உறுதியாகமுடிவு செய்துள்ளனர்.

### இளைஞர்பேரவை துண்டறிக்கை

பாடசாலைப் பகிஷ்கரிப்பு சம்பந்தமாக தமிழ் இளைஞர்பேரவை தமிழ் மாணவ, மாணவியர் மத்தியில் துண்டறிக்கை யொன்றையும் விநியோகித்து வருகிறது.

### இளைஞர் பேரவை அறிக்கை

தமிழீழக் கொடியேற்றுவோம்!

விடுதலைப் பரணி பாடுவோம்!!

பௌத்த-சிங்கள ஏகாதிபத்திய- முதலாளித்துவ ஆக்கிரமிப்பு ஆட்சி பீடத்தின் அரசியலமைப்பு நடைமுறைக்கு வருகிறது 7-9-78

தொடர்ந்தும் தமிழினத்தின் மீது அடிமை விலங்கு பூட்டப் படுகிற கொடிய நாள்-செப்ரெம்பர் 7.ந் திகதி.

மீண்டும் தமிழீழத்தை அரசியலமைப்பால் அடிமை கொண்டோமென்றுவெற்றி விழா எடுக்கிறது-சிங்கள ஆட்சிப்பீடம்.

அந்நாள் தமிழினத்தின் அடிமைத் தளையைஉடைக்க உறுதி பூணும் நாள்.

செப்ரெம்பர் 7,8,-ந் திகதிகளில் தமிழ்ப் பாடசாலைகளில் தமிழ் மாணவர் சிங்க(ள)க் கொடிக்கு மரியாதை செய்ய வேண்டுமாம், சிங்கள நாட்டுத் தேசிய கீதத்தைபாடவேண்டுமாம். இப்படிச் சிங்கள ஆட்சி பீடத்தின் ஆணவச் சட்டம் தமிழ் மாணவ சமுதாயத்தை அடிபணிய வைக்கத் திட்டமிட்டிருக்கிறது.

தமிழினம் இதை அனுமதிக்க முடியாது.

எனவே தான் கேட்கிறோம்!

தமிழீழப் பெற்றோர்களே! மாணவர் சமுதாயமே பொங்கியெழுங்கள்-புரட்சி செய்யுங்கள் புதியவிடுதலைப் பரணி பாடிடுவோம் அடிமைச் சாதனத்தை அடித்து நொருக்குவோம்— செப்ரெம்பர் 7,8,ந் திகதிகளில்.

சிங்கள ஆட்சி பீடத்திற்கும், புதிய அரசியலமைப்புக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கவும் தமிழீழத்தின் விடுதலையை உறுதிப்படுத்தவும் பாடசாலைகளை முற்றாகப் பகிஷ்கரியுங்கள். ஆட்சி பீடத்தின் எல்லாக் கொண்டாட்டங்களையும் பகிஷ்கரியுங்கள். அந்நாளில் தமிழ் ஈழத்தின்விடுதலைக்கொடி— உதய சூரியன் கொடியை ஏற்றுங்கள் தமிழீழ விடுதலைக் கீதத்தைதப்பாடுங்கள்.

சிங்கள ஆட்சி பீடத்தின் அடக்குமுறைதொடர்ந்தால் உங்கள் போராட்டமும் தொடரட்டும் என்று உறுதி செய்து கொள்ளுவோம்.

தமிழீழம் மலர்க!

---

# சொல் அளவிலே தான் சமத்துவம் சிங்களவருக்குத்தான் சமதர்மம்!

இந்த அரசியல் அமைப்பும் பழையஅரசியல்அமைப்பைப்போன்று பௌத்தசிங்கள ஏகாதிபத்தியத்தை நிறுவுதற்கே வழிவகுக்கின்றது.

பழைய அரசியல் அமைப்பினை ஆக்கியோர் சமதர்ம சனநாயகக் குடியரசை நிறுவுதற்கு அது உருவாக்கப்பட்டதென்றனர். இந்தப்புதிய அரசியல் அமைப்புச் சனநாயக சமதர்மக் குடியரசை நிறுவுதற்கு வரையப்பட்டுள்ளது. இலங்கை 'இனி 'சனநாயக சோசலிசக் குடியரசு' என வழங்கப்படும் என்று இந்த அரசியலமைப்பு விதிக்கின்றது.

சமதர்மத்தையும் சனநாயகத்தையும் முன்னும் பின்னும் மாற்றிக் கூறும் இந்த இரண்டு அரசியல் அமைப்புக்களும் சமதர்மத்தை—சமத்துவத்தைச் சொல்லளவிலேதான் வைத்துள்ளன. இவற்றின் உறுப்புரைகள் சில சமதர்மத்தைப் புதைத்துவிட்டுத் தமிழினத்தை அடிமைப்படுத்த வழிவகுக்கின்றன.

நாட்டிலுள்ள தேசிய இனங்களுக்கும், தேசிய மொழிகளுக்கும் சமயங்களுக்கும் வேற்றுமையை நிலைநாட்டிஓரினத்துக்கு ஒரு நீதி வகுக்கின்றன. சமதர்மம் என்ற போர்வையினுள் இந்த வேற்றுமைகளை மறைக்க முயல்கின்றன.

மக்கள் பேசுகின்ற மொழிகளுக்குச் சமத்துவம் கொடுக்காமல், அவர்கள் தழுவும் சமய நெறிகளுக்குச் சமத்துவம் வலங்காமல் சமத்துவத்தை— சமதர்மத்தை — ''சோசலிசத்தை'' நிலைநாட்டுகிறோம் என்று கூறுவது ஏமாற்றுவித்தையன்றோ.

பழையஅரசியல் அமைப்பு பிரதிநிதி சபைகள் என்முன் வழங்கியதைத் தேசிய அரசுப் பேரவை என மாற்றி [illegible] புதிய அரசியல் அமைப்பு தேசிய அரசுப் பேரவையைப் பாராளுமன்றம் என மாற்றிப் பெயர் இடுகின்றது. முந்திய அரசியல் அமைப்பு தேசிய அரசுப் பேரவைஉறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர் எனவே வழங்கப்படுவர்என விதித்தது. எனினும், பொது மக்கள் மட்டுமன்றி அரசாங்க உத்தியோகத்தர்களும் பாராளுமன்ற உறுப்பினர்கள் என வழங்காமல் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்என வழங்கினர். இனிமயக்கத்துக்கு இடமின்றிப்பாராளுமன்றம்பாராளுமன்ற உறுப்பினர் என்பனவே வழக்கில் நிலைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ஈழ முதல்வருக்கு லண்டனில் நவம் குதூகல வரவேற்பு!

## தமிழீழ விடுதலை யாத்திரை ஆரம்பம்!

(கொழும்பு செப்டம்பர்-3)

இன்று இரவு 9-30மணிக்கு கொழும்பு சர்வதேச விமான நிலயத்திலிருந்து, 'சுவிஸ் எயர்' விமானமூலம் லண்டனுக்கு பயணமாகும் தமிழர் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் பா. உ. அவர்களையும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தையும் லண்டன் விமான நிலையத்தில் வைத்து 4.9.78 இல் சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் அவர்களும் லண்டனிலுள்ள தமிழீழ விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளும் குதூகலமாக வரவேற்பார்கள்.

ஜமேய்க்காவில் நடைபெறும் பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டு தமிழீழ விடுதலைப் பரணிபாடிடவும் வெளிநாடுகளின் ஆதரவைத் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு திரட்டவும், வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் தமிழர் விடுதலை இயக்கத்தின் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களையும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பா. உக்களும் பிரமுகர்களும், ஆதரவாளர்களும் கொழும்பு சர்வதேச விமான நிலயத்தில் வைத்துக் குதூகலமாக வழியனுப்பி வைத்தனர்.

4-9-78ல் லண்டனையடையும் திரு. அமிர்தலிங்கத்தையும் பாரியாரையும், அங்கு ஏற்கெனவே சென்றுள்ள திரு. வி. என். நவரத்தினம் பா. உ. தலைமையில் லண்டனிலுள்ள தமிழீழ விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் வரவேற்பார்கள்.

மேற்கு ஜெர்மனியில் நடைபெறவிருக்கும் அனைத்துலக பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாட்டில் கலந்து கொண்டு தமிழீழ விடுதலைக்குரலெழுப்புவதற்காக ஏற்கனவே இங்கிருந்து சென்றுள்ள சாவகச்சேரி பா. உ., திரு. வி. என். நவரத்தினம், தமது தலைவரை வரவேற்பதற்காக லண்டனில் தங்கியிருக்கிறார்.

திரு. அமிர்தலிங்கம் அவர்கள் லண்டனில் தங்கியிருக்கும் போது அங்குள்ள தமிழீழ விடுதலை இயக்கங்களை ஒன்றிணைத்து அவற்றை ஒரே தலைமையின் கீழ் கட்டுப்பாடாக இயங்க வைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வார்.

ஜமேய்க்காவில் நடைபெறும் பொதுநலவாயநாடுகளின் மாநாட்டில் சர்வதேசப் பிரச்சினைகளையொட்டிய விவாதத்தில் கலந்து கொண்டு தமிழீழப் பிரச்சினை பற்றி திரு. அமிர்தலிங்கம் உரைநிகழ்த்துவார்.

அமெரிக்கஅரசின் அழைப்பையேற்று அங்குசெல்லும் திரு. அமிர்தலிங்கம் இரு வார காலம் அங்கு தங்கியிருந்து தமிழீழப் பிரச்சினை குறித்து பிரசாரம் மேற்கொள்வார். பின் அங்கிருந்து கனடாவுக்கு செல்வார். கனடாப் பிரதமரையும் சந்தித்துப் பேசுவார்.

கியூபாவுக்கும் திரு. அமிர்தலிங்கம் பயணம் மேற்கொள்வார். நாடு திரும்பும் வழியில் புதுடெல்லியிலும், தமிழ் நாட்டிலும் தங்கி அங்குள்ள அரசியல் தலைவர்களுடனும் திரு. அமிர்தலிங்கம் உரையாடுவார்.

சுமார் இரண்டு மாத காலம் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் வெளிநாடுகளில் இந்தத் தமிழீழ விடுதலை யாத்திரையில் ஈடுபடுவார். இங்கு அவர் இல்லாத காலத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பை திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. அவர்களும், காங்கேசன் துறைத் தொகுதியின் பொறுப்புக்களை மானிப்பாய் பா. உ. திரு. வி. தர்மலிங்கமும் கவனிப்பார்கள்

## தமிழீழ கோரி ..

—1-ம் பக்கத் தொடர்

கொள்வது என்ற தமிழ் மக்களின் ஜனநாயகக் கோரிக்கையை தமது கட்சியான ஜாதிக விமுக்தி பெரமுனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லையென்றும், அக்கோரிக்கையைத் தாம் முற்று முழுதாக எதிர்ப்பதாகவும் (சிங்கள) ஜாதிக விமுக்தி பெரமுனையின் தலைவர் திரு. ரோகனவிஜயவீரா ஐயந்திரிபற எடுத்துக் கூறியிருக்கிறார். (ஆதாரம் சன், தினபதி 2-9-78)

சிங்கள மக்களிடையே உள்ள இளம் முற்போக்கு வாதியென்றும், தீவிர இடதுசாரியென்றும் கூறப்படும் திரு. ரோகன விஜயவீராவும் தமது முந்திய இடதுசாரித் தலைவர்களைப்பின்பற்றி சிங்களத்தேசியவாதத்துள்மூழ்கி, தமிழ்தேசிய இனத்தின் ஜனநாயகக் கோரிக்கைக்கு எதிர்ப்புத்தெரிவிக்கப் புறப்பட்டிருக்கிறார்!

சிங்களவர்களிடையே உள்ள "முற்போக்கு சக்திகளை" இன்னும் தமிழர் நம்பவேண்டுமென்று கூறுவோரே! எங்கே அந்த முற்போக்கு சக்திகள்? அவர்களை அடையாளம் காட்டுவீரா என்று கேட்கின்றனர் விடுதலைத் துடிப்புள்ள தமிழ் இளைஞர்கள்.

உ

சிவமயம்

## திருமண அழைப்பு

| மணமகன் | மணமகள் |
|---|---|
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| அம்பாத்துரை | சிவசுப்பிரமணியம் |
| **நித்தியானந்தன்** | **கோகுலரமணி** |
| பயிர்செய்கை உத்தியோகத்தர் | (ஆசிரியை) |

காலம்: ஆவணித்திங்கள் 22ம்நாள் (07-09-78)
நேரம்: காலை 8-47க்கும் 10-31க்குமிடையே வரும் துலாலக்கின சுபவேளை

இடம்: வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் திருக்கோணமலை.

வரவேற்புபசாரம். 10-9-78 ஞாயிறு மாலை (மணமகன் இல்லத்தில்)

உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
(தனிப்பட்ட அழைப்பு இல்லை)

| | |
|---|---|
| சிவசுப்பிரமணியம் | செ. அம்பாத்துரை |
| குடும்பத்தினர், | குடும்பத்தினர், |
| 15/1, கந்தசுவாமி கோவிலடி, | 23. ஐயனார் கோவிலடி |
| வில்லூன்றி, | யாழ்ப்பாணம். |
| திருக்கோணமலை. | |





சிக்கன சலவைக்கு மில்க்வைற் பார் சோப் வாங்கி உபயோகியுங்கள்.
பெரிய அளவிலும், சிறிய அளவிலும் விற்பனையாகிறது.
10 மேலுறைகளை அனுப்பி அழகிய பொலிதீன் பாக் ஒன்றை பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற்—யாழ்ப்பாணம்


# ஈழநாட்டின் திரிப்புச் செய்தி இளைஞர்கள் கொதிப்பு!

## அமிர் மறுப்பு!

தாம் இங்கு இல்லாதநேரத்தில் தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்தவேண்டாம் என்று தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தமக்குப் பிரியாவிடை அனுப்பக்கூடிய மக்கள் மத்தியில் கூட்டணி தலைவர்களுக்கும், இளைஞர்களுக்கும் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தாரல்லவா?

தலைவர் அமிரின் இந்தச் செய்திக்கும் செப்டம்பர் 7 அரசியலமைப்பு எதிர்ப்பு பாடசாலைப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளுக்கும் ஒரு முடிச்சுப்போட்டு தனது திரிபுவாத விளையாட்டை காட்டியுள்ளது. 3-9-78 ஞாயிறு ஈழநாடு வாரமலர்.

செப்டம்பர் 7, 8ல் புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வரும் நாட்களில் தமிழ்ஈழத்தில் அரசாங்க கொண்டாட்டங்களைப் பகிஷ்கரிப்பதென்றும், தமிழீழ தேசியக் கொடியை தொகுதிதோறும் ஏற்றுவதென்றும், பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கும்படி மாணவர்களைக் கோருவதென்றும் திரு. அமிர்தலிங்கம் அவர்களும் கலந்து கொண்ட கூட்டணியின் 27-8-78 மத்திய செயற்குழுவிலேயே ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், "தேவையற்ற சிக்கல்கள்" என்று அமிர் குறிப்பிட்டது ஏதோ பகிஷ்கரிப்பு, ஹர்த்தால்போன்றவற்றைத்தான் என்பது போலவும்—அவற்றை திரு. அமிர்தலிங்கம் விரும்பாதது போலவும்—ஒரு தேவையற்ற திரிபுவாதத்தை எழுப்பியுள்ளது. அரசாங்கத்துக்கு திருப்தி ஏற்படுத்த இப்படியும் ஒரு திரிபுவாத பிரசாரத்தில் ஈழநாடு இறங்கியுள்ளது குறித்தே பலரும் ஆச்சரியமடைந்துள்ளனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணி மத்திய செயற்குழுவே [illegible] ...த்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அதன் செயலதிபரே அதற்குமாறான கருத்தைக் கொண்டிருப்பதாக ஈழநாடு பிதற்றியிருப்பது கண்டு தமிழ் இளைஞர்கள் கொதிப்படைந்துள்ளனர்.

ஈழநாடு செய்தி பற்றிக் கொழும்பிலிருந்த திரு. அமிர்தலிங்கம் அவர்களுடன் நாம் தொடர்பு கொண்ட போது ஏழாந் திகதிப் பகிஷ்கரிப்பு கூட்டணியின் முடிந்த முடிபென்று தெரிவித்தார்.

(1) கூட்டணி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்கள் செப்டம்பர் 7ம் நாள் நடைபெறும் பாராளுமன்றக்கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் அவற்றை பகிஷ்கரிப்பார்கள்.

(2) தமிழ்ஈழத்தில் நடைபெறும் அரசாங்கக் கொண்டாட்டங்கள் கலை விழாக்கள் எதிலும் தமிழ் மக்களோ, மாணவ மாணவியரோ பங்குபற்றவோ, பார்வையாளராக செல்வதோ கூடாது.

(3) செப்டம்பர் 7, 8 நாட்களில் தமிழீழத்திலுள்ள பாடசாலைகள்அனைத்தும் மாணவர்களால் பகிஷ்கரிக்கப்பட வேண்டும்.

(4) தமிழீழத்திலுள்ள ஒவ்வொரு தொகுதியிலும் கூட்டணியின் உதய சூரியன் கொடி அவ்வத்தொகுதி பா. உ. வினால், அல்லது அமைப்பாளரினால் ஏற்றி வைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.


● Now on Sale:

**The Sansoni Commission Evidence**

A WEEKLY PAPER

A Full, authentic account of the proceedings containing material hitherto not published, and not likely to be published in the future in any other medium. Please reserve your copies with your news agent to ensure your regular reading.

Price Re. 1/- only

News Agents please contact:-

Manager,
Ceylon News Papers Ltd.
194A, Bandaranayake Mawathe,
Colombo-12.


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org